நொய்யல் ஆற்றின் குறுக்கே அணைகள்.

***724 விஞ—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள அணைகளைப் புதுப்பிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு தோ. மு. நல்லசாமி : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், கரூர் வட்டத்தின் ஒரு பகுதியைச் செழிக்க வைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு நகலிலே திருச்சியினுடைய கடைக்கோடியில் கோவை மாவட்டத்தினுடைய பகுதியிலே ஒரு அணை கட்டுவதாக ஒரு திட்டம் சொல்லப்பட்டது. அதை எடுத்து நடத்தும் செயற்குறிப்பு இருக்கிறதா ?

இல்லையென்றுல் என்ன காரணம் என்பதை விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் தொடர்பில்லை. கனம் உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் கேட்டிருப்பது 'நொய்யல் ஆற்றின் குறுக்கே உள்ள அணைகளைப் புதுப்பிக்கும் உத்தேசம் உண்டா ?' என்பது தான். பல அணைகள் புதுப்பிக்கப்படுகின்றன. இன்னும் சில இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அணைக்கட்டுத் திட்டம் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம். அதைப் பற்றிச் செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, நொய்யலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அந்த அணைக்கட்டுக்குப் போடப்பட்டுள்ள எஸ்டிமேட் தொகை எவ்வளவு ? எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: புதிதாக அணைக்கட்டுகள் நொய்யலாற்றின் குறுக்கே 24 அணைக்கட்டுகள் இருக்கின்றன. குறிச்சி அணை, சாமூர் அணை, நொய்யல் அணை ஆகிய எட்டு அணைகள் வேலை நடைபெற்றிருக்கின்றன. இரண்டு அணைக்கட்டுகள் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மூன்று அணைக்கட்டுகளுக்கு எஸ்டிமேட் தயாரிக்கப் பட்டிருக்கிறது. ஆறு அணைக்கட்டுகளைப் புதுப்பிக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

பிச்சவரத்திற்கு அருகில் உப்பனுற்றின் குறுக்கே பாலம்.

***725 விஞ.—திரு எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, பிச்சவரம் ஆற்றில் ஒரு பாலம் அமைத்து ஷட்டர் போட்டுக் கொடுக்க அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம். சிதம்பரம் தாலுக்கா, பிச்சவரம் கிராமத்திற்கு அருகில் உப்பனுற்றிற்குக் குறுக்கே பாலம் அமைத்து ஷட்டர் போட்டுக் கொடுக்கும் திட்டத்திற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(இ) தற்சமயம் ரெகுலேட்டர் அமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது.